**கருத்து**

# திராவிடக் கட்சிகளுக்கு மாற்று இல்லை

பாஜக தன் நிலையை முன்னேற்றிக்கொள்ள திமுகவுடன் கூட்டணி அமைக்கும் எதார்த்த அரசியலை நோக்கியே நகரக்கூடும்.




**எ**ப்படியாவது தமிழகத்தில் 2016ல் ஆட்சியைப் பிடித்துவிடவேண்டும் அல்லது குறைந்தபட்சம் பிரதான எதிர்க்கட்சியாகவாவது ஆகிவிட வேண்டும் என்ற ஆசை பாஜகவுக்கு வந்துவிட்டது. ஜெயலலிதா மட்டும் கர்நாடக சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு பத்தாண்டு தேர்தல் தடை வராமல் இருந்திருந்தால் இந்த ஆசை பிறக்கவே இன்னும் பத்தாண்டுகளாவது ஆகியிருக்கும்.

அடுத்து 2ஜி வழக்கில் கனிமொழியும் ஆ.ராசாவும் தண்டிக்கப்படுவது இன்னும் ஆறு மாதங்களில் நிகழ்ந்தால், தனக்கான வெற்றிடம் முழுக்க தயாராகிவிடும் என்றும் பாஜக கணக்கு போடுகிறது. தமிழ்நாட்டில் இன்னமும் வட இந்தியக் கட்சியாகவே மக்களால் பார்க்கப்படும் பாஜக, வட இந்தியாவில் தமிழக அரசியல் பற்றி இருக்கும் தப்பான மன நிலையிலேயே இருக்கிறது. திராவிட அரசியல் என்றால் சினிமா செல்வாக்கு, தமிழ் உணர்வுப் பேச்சு, இரண்டின் கலவை மட்டும்தான் என்ற தப்புக் கணக்கு அது.

அதனால்தான் சினிமா செல்வாக்குக்காக ரஜினிகாந்த் என்ற பிரபலத்தை தன் பக்கம் இழுக்க முடியுமா என்று தொடர்ந்து பாஜக முயற்சித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இது இன்று வரை ஒருதலைக் காதலாகவே இருக்கிறது. ரஜினி என்ற புத்திசாலி திரைப்பட வணிகருக்கு, ஒவ்வொரு முறை தன் புதுப்பட ரிலீசுக்கு முன்னால் அரசியல் நுழைவு பற்றிய பேச்சை முடுக்கி விட்டு பரபரப்பு ஏற்படுத்துவதோடு அவருடைய அரசியல் ஆர்வம் திருப்தியடைந்துவிடுகிறது. எந்த ஊழல் ஆட்சிக்காக ஜெயலலிதாவை 1996ல் ரஜினி கடுமையாக விமர்சித்தாரோ, அந்த ஆட்சிக் கால வழக்கில் தண்டனை பெற்று சிறையிலிருந்து வீட்டுக்குத் திரும்பியதற்காக ஜெயலலிதாவுக்கு ரஜினி வாழ்த்து தெரிவித்த விசித்திரம்தான் அவரது உச்சபட்ச அரசியல் அறிவு. கடும் தோல்விக்குப் பின் முட்டி மோதி எழுந்து நிற்கப் பார்க்கும் இளங்கோவன் தலைமையிலான காங்கிரசால் சினிமா பிரபலம் குஷ்புவை ஈர்க்க முடிந்த மாதிரிகூட , பாஜகவால் யாரையும் ஈர்க்கமுடியவில்லை என்பதுதான் எதார்த்தம்.

தமிழ் உணர்வை எழுப்ப பாஜக செய்துவரும் முயற்சிகளும் தொடர்ந்து தோல்வியை சந்தித்துள்ளன. தமிழுக்காக குரல் கொடுக்கும் வட இந்திய எம்.பி தருண் விஜய்க்கு , கவிஞர் வைரமுத்துவைக்கொண்டு பாராட்டு விழா நடத்துவதில் பாஜக ஆதரவாளர்கள் ஈடுபட்டார்கள். ஆனால் இந்த விழாவில் பங்கேற்பதில் எந்த பெரிய ஆளுமையும் அக்கறை காட்டவில்லை. இன்னொரு பக்கம் சமஸ்கிருத வாரம், பள்ளிகளில் கட்டாய இந்தி என்று தில்லியிலிருந்து வந்துகொண்டே இருக்கும் தொடர் உத்தரவுகள் தமிழக பாஜகவுக்கு பெரும் தலைவலியாகவே

அமைந்தன. உயர் சாதியினரின் அமைப்பாகவும் பிராமணக் கருத்தாக்கத்தின் அடையாளமாகவுமே தமிழகத்தில் பாஜக வும், அதன் தாய்க் கழகமான ஆர்எஸ்எஸ்ஸும் எப்போதும் பார்க்கப்படுகின்றன. இதை மாற்ற அவர்களால் இன்னமும் முடியவில்லை. பல்வேறு சாதி சங்க அமைப்புகளை திரட்டியும் சாதிரீதியிலான கட்சிகளைத் திரட்டியும் அரசியல் கூட்டணி அமைத்தும்கூட, மக்களவை தேர்தலில் பாஜகவால் தன் ஒட்டு வங்கியை பெரிதாக்கிவிடமுடியவில்லை. மோடி போல பிற்படுத்தப்பட்ட சாதித் தலைவரை முன்னிறுத்தி தன் இமேஜை மாற்ற பாஜக செய்யும் முயற்சிகள் இதுவரை தமிழகத்தில் பெரும் வெற்றியைத் தரவில்லை. பிராமணர்களின் செல்வாக்கு மிக்க கோட்டையாகக் கருதப்படும் காஞ்சி சங்கர மடத்துக்குச் சென்று ஆசி பெற்றாக வேண்டிய நிலையில்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்த தலைவரான பொன்.ராதாகிருஷ்ணன் இருக்கிறார். இன்னொரு பக்கம் எச். ராஜா போன்றோர் பொது மேடையிலேயே பெரியாரை செருப்பால் அடித்திருக்க வேண்டும் என்றெல்லாம் பேசிய வீடியோ லட்சக் கணக்கில் யூடியூபில் வலம் வருகிறது. பாஜக , பெரியாருக்கும் , அவர் முன்நிறுத்திய சமூக நீதியான இட ஒதுக்கீட்டுக்கும் எதிரான கட்சி, மண்டல் கமிஷனை எதிர்த்து வி.பி.சிங்கின் ஆட்சியைக் கவிழ்த்த கட்சி என்ற பிம்பம் தமிழக மக்கள் மனதில் ஆழமாக இருக்கும் கருத்தாகும்.

பாஜகவுக்கு இருக்கும் ஒரே திராவிட அரசியல் முகம் இன்று அதை ஆதரிக்கும் வைகோ மட்டும்தான். அவரும் பல அடிப்படை விஷயங்களில் பாஜகவுடன் முரண்படுகிறார். மீனவர் தூக்கு தண்டனையை ராஜ பக்ஷேவை ரத்து செய்யவைத்த மோடியின் சாதனையே ஒரு நாடகம்தான் என்று கூட்டணி சகாவான வைகோவே அம்பலப்படுத்திவிடுகிறார். இந்தச் சூழலில் தமிழ் நாட்டில் 2016ல் பெரும் இடம் எதையும் பாஜக அடையும் சாத்தியங்கள் இல்லை. உண்மையில் கள நிலைமை இரு பெரும் திராவிடக் கட்சிகளில் ஒன்றான திமுகவுக்கு சாதகமாகவே உள்ளது. 2ஜி வழக்கு திமுக பிரமுகர்கள் சிலரை பாதித்தாலும், அதன் இன்றைய செயல்முறை தலைவரான மு.க.ஸ்டாலின் மீது எந்தஊழல் குற்றச்சாட்டோ வழக்கோ இல்லாத நிலையில், தண்டிக்கப்பட்டோரை கட்சியிலிருந்து நீக்குவதன் மூலம் திமுக எளிதாக தன்னை உயிர்ப்பித்துக் கொண்டுவிடமுடியும். இந்நிலையில் பாஜக , திமுகவுடன் கூட்டணி அமைத்து தன் நிலையை கொஞ்சமேனும் முன்னேற்றிக் கொள்ளும் எதார்த்த அரசியலை நோக்கியே வரும் நாட்களில் நகரக்கூடும். அதிலும் அது முந்துமா, இளங்கோவனின் காங்கிரஸ் முந்துமா என்பது கேள்விக்குறி. திராவிடக் கட்சிகளுக்கு மாற்று என்பது அவ்வளவு எளிதானதும் அல்ல; எளிமையானதும் அல்ல, இதை இன்னமும் பாஜக, காங்கிரஸ் இருவருமே சரியாக உணரவில்லை.

இந்தியா டுடே
டிசம்பர் 10,2014